**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 368 / 2018**

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05-ம் நாள் திங்கட்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 05.02.2024 | தந்தை/கணவர் பெயர்: | பரதேசி |
| பெயர்: | செல்வம் (PW-1 Chief ) | வயது : | 65/2024 |
| கிராமம்: | சந்தப்படுகை | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | | | |

**<u>முதல் விசாரணை : 05.02.2024.</u>**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 08.03.2020, 26.04.2007, 05.09.2018 ஆகிய தேதிகளில் தாவா சொத்திற்கு செலுத்திய கிஸ்து ரசீதுகள் தாக்கல் செய்கிறேன். **அது வா.சாஆ.1 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. (எண்ணிக்கை-3)** 05.06.2008 தேதியிட்ட நான் அனுப்பிய மனுவிற்கு மாவட்ட ஆட்சியர் அனுப்பிய குறிப்பாணையின் சார்வு நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தாவா சொத்து சம்பந்தமாக பரமசிவம் என்பவர் இந்நீதிமன்றத்தில் என்மீது தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 176/2019 -ன் பிராதின் சார்வு நகலை தாக்கல் செய்கிறேன், **அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசல் வழக்கு எண் 176/2019-ல் எனது தரப்பில் தாக்கல்

செய்யப்பட்ட எதிர் வழக்குரையின் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 25.07.2019 தேதியிட்ட தாவா சொத்திற்கான வில்லங்க சான்றின் இணையவழி நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.